

# நல்லூர்ப் பிரதேசக் கைவினை பற்றிய ஓர் உசாவல்.

**பேராசிரியர் என். கிருஷ்ணவேணி**
*தலைவர், நுண்கலைப் பீடம், யாழ். பல்கலைக்கழகம்*

## அறிமுகம்

யாழ்ப்பாண அரசியல் சமூக பண்பாட்டு வரலாற்றில் நல்லூர் பிரதான இடத்தைப் பெறுகிறது. பண்பாட்டின் பிரதான கூறாக விளங்கும் கைவினைக்கலை மரபு நல்லூரிலும், அதனை அண்மித்த பகுதிகளிலும் வாழ்ந்த தொழில்சார் கைவினைஞர்களினால் உருவாக்கம் பெற்றது. இலங்கையின் வடபகுதியாகிய யாழ்ப்பாணத்து அரசர்களின் இராசதானி முதலாம் சிங்கையாரியனின் காலத்தில் நல்லூரிலேயே அமைக்கப்பட்டது. கைலாய மாலைதரும்குறிப்பின்படி முதலாம்சிங்கை ஆரியன் ஜெயசிங்கை ஆரியன் என்றும் மயில் வாகனப் புலவர் தரும் குறிப்பின்படி விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி என்றும் அழைக்கப்படுகின்றான். சிங்கையாரியன் என்பது சிங்கை நகரை ஆண்ட சக்கரவர்த்திகளைக் குறித்து நிற்கிறது. யாழ்ப்பாண இராச்சியத்திற்குரிய நிர்வாக முறைகள் ஆரி யச்சக்கரவர்த்திகளினாலேயே உருவாக்கம் பெற்றன. நல்லூர் இராசதானியின் உருவாக்கத்துடன் நல்லூர்ப் பிரதேசத்தின் சிறப்பினையும் அதனை அண்டிய பிரதேசங்களிற் கட்டப்பட்ட கோயில்கள், அரண்மனைகள் அரசாங்க அதிகாரிகள், சேனாவீரர்களின் இருப்பிடங்கள், யமுனாஏரிஎனும்தடாகம், நீதிமன்றம் போன்றவை பற்றியும் அறிய முடிகிறது. நல்லூர் இராசதானியின் நாற்புறமும் கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. நகரத்திற்குப் பாதுகாவலாக இக் கோயில்கள் அமைக்கப்பட்டதாக அறியமுடிகிறது. அந்த வகையிற் தென்னிலங்கையில் குமாரக் கடவுள், சமன், உப்புல்வன், விபீஷணன்போன்ற கடவுளர்க்குக் கோட்டங்கள் அமைக்கப்பட்டது போல் யாழ்ப்பாணத்தில் வீரமா-காளி அம்மன், விநாயகர் போன்ற தெய்வங்களை அமைத்ததுடன் காலப் போக்கிற் கந்தசுவாமியையும் இணைத்துக்கொண்டதனால் நல்லூர் கந்த சுவாமி கோயில் உருவாக்கம் பெற்றது. யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் பூர்வீகம், செகராசசேகர நூற்குறிப்பின் படி குலத்தால் மறையவர்கள் என்று அறிய முடிகிறது. இவர்கள் சேது விடைக்கொடி, வெண்கொற்றக்குடை வலம்புரிச்சங்கு ஆகியவற்றை அரச சின்னங்களாகக் கொண்டவர்கள். யாழ்ப்பாண இராச்சியத்திற்குரிய நிர்வாக முறை ஆரியச்சக்கரவர்த்திகளினாலே உருவாக்கப்பட்டது. ஆரியச்சக்கரவர்த்திகளின் கீழ் அமைந்த இராச்சியம் தெமள பட்டணம் என்று சிங்கள நூல்கள் கூறுகின்றன.

கி.பி 15ஆம் நூற்றண்டின் நடுப்பகுதியிற் கோட்டை அரசர் 6ஆம் பராக்கிரமபாகு (1412-1467) அனுப்பிய அவனது சேனாதிபதியான செண்பகப்பெருமாள் எனும் சபுமல் குமாரயா (1450) 17 வருடம் ஆட்சி செலுத்தியதுடன் நல்லூரில் கந்தசுவாமி கோயிலைக் கட்டுவித்ததாக அறிய முடிகிறது. (மயில்வாகனப்

புலவர்:1995 பக்கம்43-47) கி.பி 1478 வரை ஆட்சிசெய்த பரராசசேகரன் என்பவன் கிழக்கில் வெயிலுகந்தப் பிள்ளையார்கோயிலையும் மேற்கில் வீர மாகாளி அம்மன் கோயிலையும், வடக்கிற் சட்டநாதர் கோயிலையும், தெற்கில் கைலாச பிள்ளையார் கோயிலையும் கட்டுவித்ததாக அறிகிறோம். மத்திய காலத்தில் இராசதானியின் பல பகுதிகள் முக்கியத்துவம் பெற்றமைக்கு அவற்றின் பூகோள அமைப்பே காரணமாக உள்ளது. 14ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையில் நிலவிய அரசியல் நிலைபற்றி ராஜாவலி எனும் நூற்குறிப்பின்படி (Gunasekara (Edt) 1911,பக்.46) யாழ்ப்பாண ஆரியச்சர்க்கரவர்த்தி படைபலம் செல்வம் என்பவற்றில் சிறந்து விளங்கியவனாகக் காணப்பட்டான். (பத்மநாதன் :2001 பக்46) 16ஆம் நூற்றாண்டிற் போர்த்துக்கேயரும் பின் ஒல்லாந்தரும் இலங்கையை ஆண்ட(1521-1561) காலப் பகுதியிற் சிறப்பாக சங்கிலி மன்னன் காலத்தில் போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராட்டம் முனைப்புப் பெற்றிருந்தது. கி.பி 1619 ல் சங்கிலி மன்னன் போர்த்துக்கேயரினாற் கைது செய்யப்பட்டான். 1658இல் யாழ்ப்பாண இராச்சியம் முழுவதும் ஒல்லாந்தரினால் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

அப்போது இலங்கையின் ஒரு இராச்சியமாக யாழ்ப்பாணம் இருந்தது. ஒல்லாந்தரினால் உருவாக்கப்பட்ட தேச வழமைச் சட்டம் மிகவும் முக்கியத்துவம் பெற்றது. அவற்றில் யாழ்ப்பாண சாதி அமைப்பிற்கேற்ப இடம்பெற்ற தொழில்முறை உற்பத்திப் பொருட்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அரசுக்குச் செய்யவேண்டிய ஊழியம், வரிமுறைகள் சிறப்பாக கூறப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் நல்லூர்ப் பிரதேச சூழலில் வாழ்ந்த சாதி முறையிலான தொழில்புரிவோர் பற்றி அறியமுடிகிறது. அந்த வகையில் வெள்ளாளர், மடப்பள்ளி, குயவர் சேணியர், கம்மாளர், தனக்காரர், சாண்டார் போன்ற சாதியினர் தொழில் முறைகள் பற்றி அறிய முடிகிறது. இத்தகையவர்கள் கோட்டையில் ஊழியஞ்செய்பவராக இருந்தனர். யாழ்ப்பாணத்துப் பொருளாதாரமுறையில் வருமானம் பணமாகவே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது ஒவ்வொரு சாதியாரும் தத்தம் உற்பத்திப் பொருளில் ஒரு பகுதியை வரியாகக் கொடுக்கக் கடைமைப்பட்டவர்களாக இருந்தனர்.

## சாயங் காய்ச்சுதல்

யாழ்பாண உற்பத்திப் பொருட்களிற் குறிப்பிடத்தக்கது சாயவேர். இது உற்பத்திப் பொருளாகவும் ஏற்றுமதிப் பொருளாகவும் இருந்தது. இத்தொழில் செய்வோர் சாயக்காரர் எனப்பட்டனர். சாயங்காச்சுதல் அக்காலந் தொட்டு ஒரு குடிசைக் கைத்தொழிலாக விருத்தி பெற்றிருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், காரைதீவு முதலான தீவுகளிலும் மன்னாரிலும் சாயவேர் பெருமளவில் உற்பத்தியாகியது. சாயவேர் அரசரின் ஏகபோக உரிமையாகக் கருதப்பட்டது. ஊழியர்கள் சாயவேரைக் கிளறி எடுத்து அரசாங்கக் களஞ்சியங்களில் ஒப்படைப்பதைத் தொழிலாகக் கொண்டிருந்தனர் (பத்மநாதன்:2001, பக் 72).

யாழ்ப்பாணப்பிரதேசத்தில் முக்கிய தொழில் முறைகளாக நெசவு வேலையும், சாயம் போடுதலும் விளங்கின. சாயவேர் காச்சுவோர் முதலில் சாயவேரைத் தண்ணீரில் ஊறவிட்டு நன்றாக சாயம் ஊறிய பின் வடித்துப் பாத்திரத்தில் ஊற்றிக் காய்ச்சிக் குழம்பாகும் வரை பார்த்து இறக்கி ஆற விட்ட பின்பு பல நாட்கள் வெயிலிற் காய வைப்பர். காய்ந்துகட்டியானதும் அதனைச்

சதுரத்துண்டுகளாக வெட்டி விற்பனைக் குத் தயார் செய்தனர். சாயம் காய்ச்சு வோர் தேவைக்கேற்ற வகையில் வர்ணங் களைக் கலப்பர். பொதுவாகப் பச்சை, சிவப்பு, நீலம் ஆகிய நிறங்களிலேயே சாயம் தயாரிக்கப்பட்டது. சாயவேர் ஏற்றுமதி யில் அரசுக்கு வருமானம் கிடைத் தமை பற்றி தேசாதிபதியால் எழுதப் பெற்ற அறிக்கை ஒன்று தெரிவிக் கிறது. (பத்மநாதன்: 2001 பக் 72) ஒல்லாந்தர் காலத்தில் சோழ மண்ட லக் கரையில் இருந்து துணிகள் இறக்கு மதி செய்யப்பட்டு சாயம்போடுவதற்கென சாயக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டமை பற்றியும் அதேநேரம் அரசாங்கத்திற்குரிய களஞ்சியங்களில் 1694 நொவெம்பர் மாதத்தில் 60,106 இறாத்தல் சாயவேர் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை பற்றி யும்(பத்மநாதன்:2001, பக். 72 Memoir of Hedrick Zwaa redecroon, p.40) அறியமுடிகி றது.

## நெசவுத்தொழில்

சாயம் சாய்ச்சும் தொழிலுடன் நெசவுத் தொழிலும் யாழ்ப்பாணக் கைவினைக்கலையில் தொழில் ரீதியாக முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஆரியச் சர்க்கரவர்த்திகள் நெசவுத்தொழிலை வளர்க்கும் நோக்கில் சோழமண்டலம், தொண்டைமண்டலத்தில் இருந்து நெச வாளரை அழைத்து வந்து நல்லூரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குடியேற்றி னார்கள் என்று அறியமுடிகிறது. சாய வேர் உற்பத்தி போன்று நெசவுத்தொழில் விருத்தி அடைந்ததாகத் தெரியவில்லை. நெசவு ஆடை உள்ளூர் மக்களது தேவைக்கேற்ற வகையில் உற்பத்தி செய்யப் பட்டதாகவே அறியமுடிகிறது. இத் துணி களின் தரம் பற்றிக் கருத்துக்கள் தெரிவிக் கப்பட்டதிலிருந்து அவை சற்றுக் கனதி யானவையாகவே இருந்திருக்கவேண்டும் என்று நம்ப முடிகிறது.

ஒல்லாந்தர் காலத்தில் இத்தொழில் சற்று விருத்தியடைந்ததுடன் ஜாவா போன்ற இடங்களுக்கும், ஐரோப் பாவிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது யாழ்ப்பாணத்தில் உற்பத்தியான துணி களுக்கு 30% விற்பனவைவரி அறவிட் டுள்ளதாகவும் பின்னர் முறைப்பாட் டின் காரணமாக இது 20% ஆகக் குறைக் கப்பட்டதாகவும்அறியமுடிகிறது. ஒல்லாந் தர் கால நெசவாளர்களுக்குத் தனியான தோம்புகள் இருந்ததாக அறியப்படுகிறது. (பத்மநாதன்: 2001:. பக்73) மேலும் புடவை விற்பனை பற்றிய தகவல்களை நோக் கும்போது நெசவாளர்களின் வீடுகளிலோ பிற இடங்களிலோ அன்றி அனுமதி பெற்ற குறிப்பிட்ட பொது இடங் களில் மட்டும் அவற்றை விற்பனை செய்யக் கூடியதாக இருந்தது. தமிழரசர்கள் கால வழக்கப்படி அரச முத்திரை பொறிக்கப் பட்ட துணிகளையே துறைமுகங்கள் வழியாகக் கொண்டுசெல்ல வேண்டும். இவ்வாறு முத்திரை பொறிப்பதற்கும் கூலி வசூலிக்கப்பட்டமையை நோக்கும் போது துணி வர்த்தகம் ஒழுங்குமுறைக்கு உட்பட்ட வகையில் இடம்பெற்ற தெனலாம்.

## கைவினைக்கலை

கைவினைப் பொருட்கள் தேவை யைப் பொறுத்து மீளுருவாக்கம் செய் யப்படத்தக்கவை. கலைகளைப் போலன்றி உருவத்தை மட்டுமே உடையன. பயன்பாட்டுப் பொருட்களாகிய கைவி னைப் பொருட்கள் அவற்றின் கலைத் துவம் (artistic nature) காரணமாகக் கால அடைவில் கலையாகக் கொள்ளும் பண்பினை உடையன. மேலும் பொரு ளாதாரம், பண்பாடு, புவியியற் தன்மை, சமயம், சடங்கு போன்ற பல்வேறு காரணிகள் கைவினைப் பொருள் உற்பத்திக்குத் துணையாகின்

றன. வாத்சாயனரின் காமசூத்திரம் 64 கலைகள் பற்றிப் பேசினாலும் அவையாவும் நுண்கலைகளாகக் கொள்ளப் படுவதில்லை. அவற்றுட் பெரும்பாலா னாவை கைவினைக்கலைகளே. இவைபயன் பாட்டு நோக்கில் (utility purpose) முதன்மை பெறுபவை பண்டைக் கிரேக்கர் களும் ரோமர்களும் கலையைக் கைவினையில் இருந்து வேறுபட்ட தாகக் கருதவில்லை. அத்தகைய கலைக் கோட்பாடுகள் எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை. சப்பாத்துச் செய்தல், வள்ளங் கட்டுதல், மரச் செதுக்கல் வேலைப் பாடு போன்றயாவும்கலைகளாகவே கொள் ளப்பட்டன. நவீன ஆங்கிலத்தில் Art என்ற சொல் இடம்பெற்றது போன்று மத்தியகால லத்தீன் மொழியில் "Ars" என்பது சிறப்பு வகையான தொழிற் றிறனையே (skill) குறித்து நின்றது. கிரேக் கத்தில் 'techne' என்ற சொல் செயற்றிறனைக் குறித்து நிற்கிறது. சென் னைப் பல்கலைக்கழக ஆங்கிலத் தமிழ் அகராதி 'Art' என்ற சொல்லுக்குக் கலை, கலைத்திறன், கலைத்திறன் அமைந்த வேலைப்பாடு, கலைப்பொருள், அறி வார்ந்த திறமை. செயற்துறை நூலறிவு, விஞ்ஞானத்தொழிற் துறை, தொழில், கைவினை போன்ற அர்த்தங்களைத் தருகி றது. மறுமலர்ச்சிக் காலக் கலைஞர்களும் தம்மைப் பண்டைக் கலைஞர்கள் போன்று கைவினைக் கலைஞர்களாகவே கருதினர். 18ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியிலேயே கலை கைவினை என்ற பாகுபாடு வலுப்பெற்றது. எவ்வாறாயினும் கலையில் கைவினைத்திறன் பிரதான இடத் தைப்பெறுகின்றது. ஒரு கலைஞனது கைவினைத்திறனும், ஒரு கைவினைக் கலைஞனது கலைத்திறனும் ஒத்த தொடர் புடையவை (mutually related). இலங்கையிற் கலையும், கைவினையும் ஒன்றிணைந்து வளர்ந்து ஒன்றில் இன்னொன்று செல்வாக் குச் செலுத்துவதாக உள்ளமையை நாம் இன்றும் காணலாம். அதாவது மிகப் பெரும் நுண்கலைப் படைப்புக்கள், உலோகம்மரத்தினாலான கைவினைத் திறன் மிக்ககலைத்துவப் படைப்புக் கள் போன்றவற்றைப்பார்க்கும்போது குறிப்பாக உலோக ஆபரணங்களைப் பார்க்கும்போது மேற்கூறப்பட்ட கருத் துக்களை அவதானிக்கலாம். கைவினைக் கலைஞர்களினாற் பெருமளவிற் (arti-sans) படைக்கப்பட்ட கலைத்துவ உற் பத்திகள் கைவினைக்கலையின் மகத்து வத்தை விளக்குவனவாக உள்ளன. ஆனந்தக் குமாரசுவாமி அவர்களின் இடைக்காலச் சிங்களக்கலை (The Mediael Sinhalese Art, 1908)எனும் நூல் இடைக்காலத்தில் கலை, கைவினைகளை வேறுபடுத்திக் காட்டுவது டன் இக் கலைகள் அந்நியப் படையெடுப் புக்களுக்கு முன்னர் உள்ள சமூ கக் கட்டமைப்பு, அரசியல் நிர்வாக மாற்றங்கள் என்பவற்றுடனும் அந்நியர் ஆதிக்கத்திற்குற்பட்ட நிலையிலும் சுதந்திரத்திற்கு பின்னுள்ள நிலையுடனும் தொடர்புபடுத்தி விளக்கப்பட்டுள்ளமை யும் கவனிக்கத்தக்கது.

எவ்வாறாயினும் கலை, கைவினை என்றபாகுபாடு அவை இரண்டுக்கும் இடை யிலானஇடைவெளிமிகவும்ஒடுங்கியசிறிய அளவில் உள்ளமை கவனத்திற் கொள்ளப் படுவதையும் அவை இரண்டிற்கும் இடை-யிலான தொடர்பு உலகப்பொதுவான ஒன் றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளமையையும் காணலாம். அண்மைக்கால விமர்சனங் கள் "கட்டடக்கலைஞர், சிற்பக்கலை ஞர், ஓவியர்கள் கைவினைத்திறனுடை யவர்கள் எனவும் கலைக்கும் கைவினைக் கும் இடையில் பெரிய அளவுவேறு பாடு இல்லை எனவும் கூறுகின் றமை கலையில் கைவினைத்திறன் முக்கியத்துவத்தையே எடுத்துக்காட்டு கின்றன. (The foundation of

craftsman ship is however indispensable for every artist). ஒரு கல்லைத் தனக்குப் பயன்படும் விதத்தில் புதிய வடிவம் கொடுத்துக் கருவியாக்கிய ஒருவனே முதற்கலைஞன் என்று மானுடவியலாளர் கூறுவர். மனிதனது தேவையினின்றும் பிறந்ததே கலை.

## கைவினைக்கலைகளும் ஐதீகமும்

கலை, கைவினைகளைப் பொறுத்த மட்டில் அதற்குரிய தெய்வமாக விஸ்வகர்மாவைக் கொள்வது ஐதீகம். விஸ்வகர்மா கலைகளுக்குத் தலைவனாகவும், ஆயிரம் கைவினைக் கலைகளுக்குக் குருவாகவும் தேவதச்சனாகவும், தேவலோக மாளிகைகளைச் சிருஷ்டித்தவராகவும் ஆபரண வடிவமைப்பாளராகவும் முதற் கைவினைஞராகவும், கலைகள் விஸ்வகர்மாவின் காரண-மாகவே உயிர் வாழ்வதாகவும், இறப்பற்ற வழிபாட்டுக்குரிய பெருந் தெய்வமாகவும் கூறப்படுகிறார் (Coomaraswamy1913:33). மகாபாரதம் மயனாற் கட்டப்பட்ட மயசபா பற்றியும் தேவ சிற்பியான விஸ்வகர்மனாற் கட்டப்பட்ட கற்பனைக் கெட்டாத கனவுலகங்களான இந்திரப்பிரஸ்தம் பற்றியும் துவாரகை பற்றியும்கூறுகின்றது. இராமாயணம்7 அல்லது 8 மாடிக்கட்டடங்கள் பற்றிக் கூறுகிறது. (coomaraswamy: 1913:XI)

இவ்வாறு பண்டைய இதிகாசங்கள் தரும் குறிப்புக்களில் இருந்து கட்டடக் கலை, கைவினைக்கலைகளைப் பற்றிய எண்ணக்கரு பற்றியும் அதன் தொடர்ச்சியான வளர்ச்சி நிலைகளாக பின்வந்த காலக்கலை மரபினையும் நோக்கலாம். 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய மயப்படுத்து கைக்குட்பட்ட கல்வி முறைகளினால் கீழைத்தேயக் கல்வி, வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள்காரணமாக இவற்றின் மகத்துவம் பின் தள்ளப்பட்டாலும் 20ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் விமர்சனமுறையிற் புத்திபூர்வமான விளிப்புணர்வினால் பண்டைய இலக்கியங்கள் கலை, கைவினையின் மேன்மை உணரப்பட்டுக் கல்வியியலாளர்களினால் அவை வியாக்கியானப்படுத்தப்பட்டு சமூகத்தில் அவற்றுக்குப் பிரதான இடம் கொடுக்கப்பட்டது. இந்த வகையில் பண்டைக் கலைப் பொருட்கள்மக்கள்மரபுரிமையாகக்கொள்ளப்பட்டன.

## பஞ்சகம்மாளர் மரபு

பிரபஞ்சம்முழுவதற்கும்அடிப்படையாக அமைந்த கடவுள் விஸ்வப்பிரமன் ஆவார். பஞ்சபூதங்கள் அதாவது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன விஸ்வப்பிரமத்தின் உடலாக வர்ணிக்கப்படுகின்றன. விஸ்வப்பிரமாவின் பஞ்சமுக தியானத்தினால் சநக, சநாதன, அபுவநச, பிரதநச, சுபர்நச எனும் நாமங்களைஉடைய மநு, மயன், துவஷ்டா, சில்பி, விஸ்வக்ஜீய எனும் பஞ்சபிரமாக்கள் உற்பவமாகினர் என்பது ஐதீகம். இந்த பஞ்சபிரமாக்களினாலும், பஞ்ச சக்தியினாலும் சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் எனும் பஞ்சகிருத்தியங்கள் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது. பஞ்சகம்மாளர்களும் விஸ்வகுல வழித்தோன்றல்களாகக் கொள்ளப்படுகின்றனர். இவர்கள் மநுவின் வழி வந்த கொல்லர்களாகவும், மயன்வழி வந்த தச்சர்களாகவும், துவஷ்டாவின் வழிவந்த செம்பு, பித்தளை வேலை செய்யும் கன்னார் எனவும், சிற்பியின் வழிவந்த கல்தொழில் வேலை செய்வோராகவும், (கற்தச்சர்) விஸ்வக் ஜீய வழிவந்த பொற்கொல்லராகவும் நம்பப்படுகின்றனர். இவர்களுள் கைவினைமரபில் சிற்பிக்கும் பிரதான இடம் உண்டு. சிற்பக்கலை நுண்கலைகளில் ஒன்றாகக் கொள்ளப்பட்டாலும்

கைவினைத்திறன் அடிப்படையில் செதுக் கல் வேலைப்பாடுகள் முக்கியத்துவம் பெறுவது குறிப்பிடத்தக்கது. கோயில் கள் சகல கைவினைக் கலைகளுக்கு அடிப்படையாக அமைவன.

அந்த வகையில் சிற்பிகளுக்குச் சமூகத் திற்தனி இடம் உண்டு. தலைமைச் சிற்பியைச் சிறப்பாக "ஸ்தபதி" என்ற பெயரினால் அழைப்பது வழக்கம். சிற்பாசாரியர் என்ற பெயரும் இவருக்குண்டு. "சில்பி" எனப்படு பவன் தொழில்நுட்பத்திறனோடு கூடிய சிற்பக்கலையிற் தேர்ச்சி பெற்ற கைவினைஞ னாவான். இவனுக்குக் "கம்மியன்" என்ற பெயரும் உண்டு. சிற்பக்கலை அடங்கலாக ஏனைய கலையாக்கங்களை நெறிப்படுத்தப் படுபவரே ஸ்தபதி ஆவார். கோயில் நிர் மாணம், விக்கிரகங்களை உருவாக்குதல் போன்ற பெரும் பொறுப்புக்களை உடைய வராக இவர் விளங்குகிறார். சிற்ப சாஸ்திர நூல்களில் ஒன்றான மான சாரம் 2ம் அத்தியாயம் சிற்பியின் தெய்வ மரபு பற்றி விரிவாகக் கூறுகிறது. இது "சில்பிசாசனம்" என்றே அழைக் கப்படுகிறது. இது பல்வேறு துறை சார்ந்த கலைஞர்களின் மரபு பற்றிக் கூறு வதும் கவனத்திற் கொள்ளத்தக்கது. ஸ்தா பன அதிதி என்பதனால் "ஸ்தபதி" என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளமை கவனத் திற் கொள்ளத்தக்கது. இந்தியாவில் வேதகாலந் தொட்டுக் கைவினைஞர் கிரேணிகள் இருந்ததாகவும் அவை அரசியல் ரிதியாகச் செல்வாக்குப் பெற் றவை எனவும் அறியமுடிகிறது.

ஸ்தபதியுடன் ஏனைய தொழிற் திறன்மிக்க சூத்திரகிராகி, வர்த்தகி, தக்ஷ்சன் போன்றோரும் கைவினைகளிற் தேர்ச்சி பெற்றவர்கள் என்றே கூறவேண்டும். அளவு களை மதிப்பிடுவதில் சூத்திரகிராகி வல்ல வனாவான். சூத்திரக்கிராகியின் அபிப்பி ராயத்தை அநுசரித்தே தக்ஷ்சன் செதுக் கல் தொழில் செய்வதாகக் கூறப்படு கிறது. சித்திரங்களை வரைவதிற் தேர்ச்சி பெற்றவன் வர்த்தகி என்று அழைக்கப் பட்டான். தக்ஷ்சன், வர்த்தகி போன்றோ ருக்குக் குருவாக விளங்கும் தகுதி சூத்திரகிராகிக்கு உண்டு. நுண்ணிதிறகயி றிட்ட நூலறி புலவனாக இனங்காணப் பட்டவனே சூத்திராக்கிராகி. காமசூத்திரம் சிற்பக்கலை அறிவுள்ள கைவினைஞனை "நாயகன்" (nayak) என்று குறிப்பிடுவதில் இருந்து அவனது உயர்ந்த அந்தஸ்து அறியப் படுகிறது. "நாயகன் என்பது பண்பட்ட மனிதன் (man of culture)என்று உயர்த்திப் பேசப்படுகிறான்.

யாழ்ப்பாணத்து ஸ்தபதிகள் பலர் இன்று பரம்பரை பரம்பரையாகச் சிற்பக் கலையைப் பேணி வளர்த்து வருகின்றனர். ஆரம்ப காலங்களிற் தென்னிந்தி யாவில் இருந்து வந்தவர்களே சிற்பக் கலை, கோபுர வேலைகளில் ஈடுபட் டனர். இவர்களிடம் பயிற்சி பெற்ற யாழ்ப்பாணத்து ஸதபதிகள் தம் குலத் தொழிலாக இக்கலைமரபை வளர்த்து வருகின்றனர். சிற்பக்கலை வல்ல ஸதபதிகள் பரம்பரை அராலி, வட்டுக்கோட்டை, கோண்டாவில் போன்ற இடங்களிற் தொழில் புரிகின்றனர். நல்லூரை அண் மித்த பகுதிகள் என்று கூறக்கூடிய வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம், நீராவி யடி போன்ற இடங்களிற் சிறப்பாகத் தம் தொழில்களைச் செய்துவரும் ஸ்தபதிகள் பலர் உள்ளனர். யாழ்ப் பாணம் நீராவியடியைச் சேர்ந்த சுப்பிர மணியம் பாஸ்கரன் இவரது சகோதரரான சரவணன் போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்கள் விக்கிரக வார்ப்புக் கலையிலும் தேர்ச்சி பெற்றவர்கள். வெள்ளி, பித்தளை, ஈயம், செப்பு, பொன் என்ற பஞ்ச உலோ கங்களையும் (பஞ்ச தாது) பயன்படுத்தி இவற்றுடன் காரியமும் சிறிது கலந்து விக்கிரகங்களை செய்கின்றனர்.

யாழ்ப்பாணத்து ஸ்தபதிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் சிற்ப சாஸ்திர

நூலறிவு குறைந்தவர்களாயினும் ஓரளவுக்கு ஆகமங்கள், புராணங்கள், சிற்பசாஸ்திரங்களில் அறிவுடையவர்களாக இருந்து தாம் பெற்ற பயிற்சி அநுபவம் மூலம் சிற்ப விக்கிரகங்களை உருவாக்குகின்றனர். இவர்கள் தம் பட்டறைகளில் இத் தொழில் முறைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இவர்களினால் உருவாக்கப்பட்ட சிற்ப விக்கிரகங்கள் காணப்படுகின்றன. இவர்கள் பரம்பரை பரம்பரையாக இத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை கவனத்திற் கொள்ளத்தக்கது.

### யாழ்ப்பாணக் கைவினை மரபில் ஆபரணக்கலை

பஞ்சகம்மாளரில் கொல்லர், தச்சர், கன்னார், சிற்பி, ஆகியோரை அடுத்து பொற்கொல்லர் என்ற வகுப்பினர் இடம் பெறுகின்றனர். விஸ்வப் பிரமாவின் பஞ்சமுகங்களில் இருந்தும் தோன்றிய பிரமகுலத்தவர்களில் விஸ்வக்ஞ குலத்தில் தோன்றிய பொற்கொல்லரே தம்குலத் தொழிலான தங்க ஆபரணங்களைச் செய்வதில் ஈடுபட்டிருந்தனர். விஸ்வப் பிரமாவின் வழித்தோன்றிய பொற்கொல்லர் தெய்வீகத்தன்மை பொருந்திய படைப்பாளிகளாகவே கொள்ளப்பட்டனர். பிரபஞ்ச இயக்கத்திற்கு வேண்டிய தொழில் முறைகளைச் செய்ய விஸ்வப்பிரம குலத்தவர்களை இறைவன் படைத்ததாக ஐதீகம். இவர்களில் விஸ்வக்ஞ குலத்தவர்களுக்கு சுபனஸரிஷியே மூலவர். இவர் பிரணவவேதத்தாற் துதிக்கப்பட்டவராவர். இவர்கள் மக்களைக் கவரும் அழகிய தங்க ஆபரணங்களைப் படைக்கும் தொழிலுக்குரியவர்களாவர். தெய்வ விக்கிரகங்களுடனும் இவர்களுக்குள்ள தொடர்பு காரணமாக இவர்களது சமூக அந்தஸ்தும் உயர்வானதாகவே உள்ளது.

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலம் பரம்பரை பரம்பரையாக நகைத்தொழில் வேலை செய்யும் பலருள் நாயன்மார்க்கட்டு புஸ்பநாதர், நல்லூர் முத்திரைச்சந்தியைச் சேர்ந்த கந்தையா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். கந்தையாவின் பரம்பரையில் முன்வந்தவராக ஏரம்பர் காணப்படுகிறார். இவர் வட்டுக்கோட்டையில் வசித்ததாக அறியமுடிகிறது. இவரின் மகன் சின்னத்தம்பி, சின்னத்தம்பியின் மகன் கணபதிப்பிள்ளை, இவரின் மகன் கந்தையா ஆவார். இவர் தனது 14ஆவது வயதிலேயே தொழில் செய்ததாகக் கூறியுள்ளார். மலேசியா, இந்தியா போன்ற இடங்களுக்கும் சென்று இத்தொழிலை விரிவுபடுத்தியுள்ளார். மலேசிய மன்னரின் அரண்மனையில் 20நாட்கள் வேலை செய்ததாகத் தமது செவ்வி ஒன்றில்(2001) கூறியுள்ளார். இவரிடம் 70 க்கும் மேற்பட்டோர்தொழில்முறைகளைக்கற்று யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் போன்ற இடங்களிற் தொழில் செய்து வருகின்றனர். கந்தையாவின் பரம்பரையினர் இத்தொழிலில் ஈடுபடவில்லையாயினும் அவரிடம் பயின்றவர்கள் தொழிற்துறையில் புதிய பரம்பரையை வளர்த்துள்ளனர். நாயன்மார்க்கட்டைச் சேர்ந்த புஸ்பநாதர் நல்லூர் பிரதேசத்தில் புகழ்பெற்ற தொழில் தேர்ச்சியுள்ள ஒருவராக விளங்கியுள்ளார். தட்டார் தெரு, சங்கானை, சங்கத்தானை, பருத்தித்துறை போன்ற இடங்களிலும் நகைத் தொழில் செய்வோர் பரம்பரை பரம்பரையாகத் தொழிலை வளர்த்து வருகின்றனர்.

நல்லூரை அண்மித்த பிரதேசங்களிற் குறிப்பாக கன்னாதிட்டியில் காளி கோயிலடியில் பரம்பரை பரம்பரையாக வசித்துவரும் வீட்டில் சாந்தகுமாரன் என்பாரது தலைமுறையானது நாகலிங்கம், துரையப்பாப் பத்தர், பஞ்சரத்தினக் கோபால், சாந்தராமன் போன்றோரை உள்ளடக்கியது. சாந்தராம

னைச் செவ்விகண்டபோது முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் 1882இல் தனது மூதாதையர்களினால் நகைக்கடை திறக்கப்பட்டதாகவும் “இரத்தினக்கல் வியாபாரம்” எனக் கடைக்குப் பெயரிட்டதாகவும் கூறினார். மேலும் நாகலிங்கம் துரையப்பாப் பத்தர், நாகலிங்கம் முத்துக்கிருஷ்ணன் என்கின்ற இரு சகோதரர்கள் இணைந்து இவ்வியாபாரத் தலத்தை ஆரம்பித்ததாகக் கூறுகிறார். இவர்களது குல தெய்வம் காளி என்றே அறிய முடிகிறது. இக்கோயிலின் முன்னாலுள்ள குளம் சோழமன்னர்களாற் கட்டப்பட்டது என்ற தகவலையும் தந்துள்ளார். இது வரலாற்று ரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டியது.

பொற்கொல்லர் தம் வீடுகளிலேயே பட்டறை அமைத்து நகைசெய்து வருகின்றனர். இப்பட்டறைகளில் தொழிலனுபவம் உள்ளவர்களும் கிராம வழக்கங்களை அறிந்தவர்களும் தலைமைப் பொறுப்பேற்றுத் தொழில் செய்வோருக்கு வழிகாட்டியாக இருப்பது வழக்கம். பொற்கொல்லர்பரம்பரையில்வந்தோர் குருகுலப் பாரம்பரியமாகவே இத்தொழிலை மேற்கொண்டு வந்த நிலையில் காலத்தின் தேவைக்கேற்பவும், தொழிநுட்ப வளர்ச்சியினாலும் இயந்திரங்களைப் பயன்படுத்தி (machine cut) நகைகள் செய்யும் வழக்கம் தொழிலை இலகுபடுத்தியது. பெரும்பாலும் 80களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் வேலைவாய்ப்புத்தேடி மேற்குலக நாடுகளுக்குச் சென்றதுடன் தொழில் முறை இயந்திரங்களைக் கொண்டுவந்தனர். நகைத் தொழிலில் இயந்திரங்களின் பாவனை அதிகரித்தது. இயந்திரங்களை இயக்குவதற்கான முறைமைகள் அதற்குரிய நூல்களின் (catalogs) மூலம் அறிந்து தொழிலை மேற்கொள்வதனால் காலதாமதம் தவிர்க்கப்படுவதுடன் எளிமையான நகைகளும் செய்யப்படுகின்றன. எவ்வாறாயினும் தாலி போன்றவற்றைச் செய்வது கைத்தொழிலாகவே உள்ளது.

நகைத்தொழில் கைவினைக் கலையாக இருந்தநிலையில் அது சடங்காசாரத்துடன் கூடியதாகவும், பல்வேறு படிமுறைகளைக் கொண்டதாகவும் இருந்தது. ஆரம்பத்திற் பொற்கொல்லர் சாதியைச் சேர்ந்தவர்களே இத்தொழில் ஈடுபடமுடியும் என்ற நிலை, ஒரு வரையறை இருந்தது. பொற்கொல்லர் தம் குலத்தொழிலினை மற்றவர்களுக்குப் பயிற்றுவிக்கவும் மாட்டார்கள். குறைந்தது ஐந்து அல்லது ஆறுவருடமாவது ஒருவன் இத்தொழிலில் பயிற்சி பெறுவதோடு குருதட்சிணையாக 3 அல்லது 4வருடங்கள் தனது குருவுடன் சேர்ந்து தொழில் செய்ய வேண்டும். இத்தொழிலைப் பயிலும் மாணவருக்கு முதலில் ஒரு மண்சட்டியில் உமியைப் போட்டு நெருப்பு மூட்டப் பழக்கப்படுகிறது. அதாவது தலைமைப் பத்தருக்கு அவர் செய்ய வேண்டிய நகைக்கான தங்கத்தை உரியபதத்தில் மென்மைப் படுத்திக் கொடுத்தல் வேண்டும். தங்கம் மென்மையான உலோகம் ஆகையினால் அது கொப்பர் அல்லது வெள்ளி போன்ற உலோகங்களுடன் சேர்க்கப்பட்டுக் கடினத்தன்மை ஆக்கப்பட்டே நகை செய்யப்படுகிறது. இவ்வாறு நெருப்பிற் தங்கம் காச்சப்பட்டதும் அதை உருக்குவதற்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது. சிரட்டைக்கரியில் தங்கத்தை வைத்து அதனை உமிச்சட்டியில் வைத்து உருக்கப் பழக்கப்படுகிறது. பொன்னுருக்குச் சடங்கு வீட்டில் நிகழும் போது இதனைப் பலரும் அவதானித்திருப்பர். உருகியதங்கத்தை நீள்கம்பியாக நீட்டக் கற்றுக்கொள்கிறான். செய்ய வேண்டிய ஆபரணத்தைப் பொறுத்து அதாவது சங்கிலியாக இருப்பின்

நீள்கம்பியாகவும், பதக்கமாயின் தங் கம் தட்டையாகவும், தோடாயின் நாண யம் போன்ற அமைப்பிலும் வடிவமைக் கப்படுகிறது. இதன் பின் ராத்து வேலை இடம்பெறும். அதாவது விளிம்புகளை நேராக விழுத்தி ராவுதல் ஆகும். அதைத் தொடர்ந்து நகை செய்வதற்குரிய சிறிய ஆயுதமான வாளினால் அறுக்கப்படும். நகைத்தொழில் பயிலும் ஒருவனுக்கு முதலில் வெள்ளியில் இப்பயிற்சி கொடுக் கப்படும். இதன் பின்னர் ஒட்டு வேலைப்பயிற்சி, குறிப்பாக வெட்டிய தங்கத்துண்டுகளை ஒன்றாக இணைத்து ஒட்டக்கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு ஆபரணத்தை முழுமையாக்கிய பின்னர் அதனை மினுக்கி மெருகூட்டும் பயிற்சியைப் பெறுகிறான். இது குறிப்பிட்ட மருந்து பூசப்பட்டு தகுந்த வெப்பத்தில் காய்ச்சி எடுக்கும் செயல் முறையாக உள்ளது. இதனைத் தொடர்ந்து கல்லுப் பதித்தல், பட்டம் வெட்டுதல் போன்ற செயற்பாடுகளைக் கற்றுக் கொள்கிறான். எல்லோரும் இத்தகைய பயிற்சியைப் பெற்றுத் தொழிலுக்கு வந்தாலும் இப்போது பலர் தொழில்புரியும் நிலையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலைச் செய்கின்றனர்.

நகைத்தொழிற் செயன்முறையில் ஓம்சம் செய்தல் (உருப்படி செய் தல்) முக்கியத்துவம் பெறுகிறது. ஓம்சம் செய்வதிற் சிறப்புப் பயிற்சி பெற்ற வராக நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த சரவணமுத்து கந்தசாமி என்பவர் காணப்படுகிறார். காசித்தம்பி என்பவர் தமது குரு எனக் கூறும் இவர் மூன்று தலை முறையாக இத்தொழிலைச் செய்து வரு கிறார். இவரது பரம்பரையினராக நாக மணி, குட்டிப்பிள்ளை, விஸ்வலிங் கம், சரவணமுத்து, கந்தசாமி போன் றோரும் அடுத்தவராக சிவகுமாரும் காணப் படுகின்றனர். கந்தசாமி பெருமையாகக் கூறும் விடயம் 1932இல் இலங்கை வந்த எலிசபெத் மகாராணியாருக்கு இவரது குருவாகிய காசித்தம்பி அவர்கள் ஒருபுறோச் செய்து கொடுத்தமையாகும்.

## ஆபரணக்கலையும் சடங்குகளும்

யாழ்ப்பாணக் கைவினை மரபில் ஆபரணத்தொழில் பிரதான இடத் தைப் பெறுகிறது. யாழ்ப்பாண மக்களது பண்பாட்டில் ஆபரணங் களுக்குத் தனி இடம் உண்டு . ஒருவனது வாழ்க்கையில் இடம்பெறும் பல்வேறு சடங்குகள் சம்பிரதாயங்களுடன் தொடர் புடையதாக ஆபரணங்கள், நகை களை அணியும் வழக்கம் இன்றும் இடம்பெறுகிறது. ஆபரணங்களை நகைகள் என்றும் அணிகலன் என் றும் அழைப்பது வழக்கம். அணிகலன் என்பதில் உள்ள 'அணி' என்ற சொல் அழகு படுத்தல் என்ற அர்த்தத்தைக் கொண்டது. அணிகள் அலங்காரங்களுக்குள் அடங்கு வதை இலக்கியத்திற் காணலாம். உவமை, உருவகம் போன்றன அணிகளே. பெண்கள் எவ்வளவுதான் அழகுடையவர் களாக இருந்தாலும் தம்மை அணிகலன் களினால் அழகுபடுத்துவது குறிப்பிடத் தக்கது. அழகுக்கு அழகுசேர்க்கும் அணி கலன்கள் மக்களது வாழ்க்கையில் பல்வேறு சடங்குகளுடன் தொடர்புடையனவாகவும் குறியீட்டுரீதியான அர்த்தங்களை வெளிப் படுத்துவனவாகவும் உள்ளன.

ஒருவரது வாழ்க்கையில் முக்கியத் துவம் பெறும் திருமணச்சடங்கு "தாலி" அணியும் வழக்கத்தைக் கொண்டது. இதே போன்று மூக்குத்தி, மிஞ்சி போன்றன வும் அர்த்தம் நிறைந்தவை. "தாலி" என்பது செழிப்புவிருத்தி போன்ற அர்த்தங்களைக் கொண்டது.திருமணத் திற்கு முன்னர் குறித்த நன்னாளில் பொன் உருக்குதல் எனும் சடங்கு மூலம் உருக் கிய பொன்னிலேயே பின்னர் தாலி செய்து

மஞ்சட் கயிற்றிலோ அல்லது தங்கச்சங்கிலி அல்லது கொடியில் கோர்த்து மணப் பெண்ணின் கழுத்தில் மணமகன் "தாலி" அணிவித்தலே பிரதான சடங்காகும். தாலி களிற் பலவகை உண்டு. பிள்ளையார் தாலி, அம்மன் தாலி, பொட்டுத்தாலி, சந்தான கோபாலாதாலி, தாலியில் சூரியன், சந் திரன் சிவலிங்கம் போன்ற சின்னங் களும் இடம்பெறுவது கவனிக்கத்தக்கது. சூரியன் சந்திரன் உள்ளவரை வாழ்வு நிலைக்கும் என்பதைக் குறியீட்டு ரிதியாக உணர்த்தி நிற்கிறது. மதஞ்சார்ந்த வகையில் கிறீஸ்தவத் தாலியில் புறா, சிலுவை, பைபிள், இதயம் போன்ற குறியீட்டு வடிவங்கள் இடம்பெறுவதைக் காண லாம். பிதா, சுதன், பரிசுத்த ஆவி என்பன கிறிஸ்தவத்தில் முக்கியத்துவம் பெறுவன. புறா பரிசுத்த ஆவியையும், சிலுவை யேசு வையும் குறித்து நிற்கிறது. ஏனைய அணி கலன்களும் சடங்குகளுடன தொடர்புடை யவை.

கர்ணவேதனம் எனும் சம்ஸ்காரம் காது குத்துதலைக் குறித்து நிற்கிறது. இச் சடங்கின் மூலமே முதன் முதலாக ஒரு குழந் தையின் காதில் நகை அணியப்படுகிறது. குழந்தை பிறந்து 31வது நாள் துடக்குக் கழித் தல் எனும் சடங்கின் மூலம் அதன் உடலில் முதன்முதலாக பஞ்சாயுதம் கோர்த்தசங்கிலி அணிவது வழக்கம். அணிகலன்கள் அழகு சேர்ப்பனவாகவும், குறியீட்டு அர்த்தம் கொண்டனவாகவும், சடங்குகளுடன் தொடர்புடையனவாகவும் இருப்பதுடன் நம்பிக்கைகளின் அடிப்படையில் தோஷங் களை நீக்கும் ஆற்றல் கொண்டனவாகவும் உள்ளன. சாஸ்திர சம்பிரதாயங்களுடன் தொடர்புடைய இந்த அணிகலன்கள் குழந் தையின்கிரகநிலைபிறந்த நட்சத்திரம், திகதி போன்றவற்றுடன் தொடர்புடைய பலன் களைக் குழந்தைக்கு வழங்கும் என்ற நம் பிக்கை உண்டு. நகைகளுக்கு நோய் நீக்கும் ஆற்றல் உண்டு என்ற வகையில் பொன்னுக்கு வீங்கி என்ற பெயரை உடைய கூவைக்கட்டு என்ற நோய்க்கு நகை அணியும் வழக்கம் யாழ்ப்பாண சமூகத் தில் இடம்பெறுகிறது. தோஷங்களில் இருந்து விடுபடுதலுக்கும் நகை அணி வதற்கும் தொடர்புண்டு. அட்சரக் கூடு அணிதல் நோய் நீக்கம் காரணமாக முக்கியத்துவம் பெறுகிறது மேற்கூறப் பட்டவாறு அழகுணர்வு, சடங்கு, நம் பிக்கை, நோய் நீக்கம், தோஷநீக்கம் போன்றவற்றின் அடிப்படையில் முக்கியத் துவம் பெற்ற அணிகலன்கள், நகைகள் யாழ்ப்பாணத்துக் கைவினைக் கலை பொருட்களுள் முதன்மை பெறுவன.

ஆடை ஆபரணங்கள் அணி வதன் மூலம் இன்பத்தைப் பெறும் பெண் கள் நகை அணிந்து அழகு பார்ப்பதி லும் பெருமையும் கர்வமும் கொள்கின்ற னர். திருமணத்தின் போது பெண்வீட் டார் கொடுக்கும் சீதனத்தில் (ஸ்ரீதனம்) நகைகள் அல்லது ஆபரணங்கள் முக்கியத் துவம் பெறுவன. பெண்கள் உடல் முழுவதும் அணியக்கூடிய நகைகள் பலவகைப்படும். காது, நெற்றி, கழுத்து மூக்கு, கை, கைவிரல்கள், மணிக் கட்டு, கால்கள், கால்விரல்கள் போன்ற உறுப்புக்களை அழகுபடுத்தும் வகையில் தோடு, நெற்றிச்சுட்டி, ஆரம், சங்சிலி, அட்டி யல், நெக்லெஸ், மகரப்பதக்கமாலை, காசுமாலை, தாலிக்கொடி, மூக்குத்தி, பேசறி, பிலாக்கு, வளையல்கள், சிக்கமுகக் காப்பு, பூட்டுக்காப்பு, முறுக்கு வளையல், நெளிக்காப்பு, மோதிரம், பிறேஸ்லெட், காற் சங்கிலி, காற்கொலுசு போன்ற அணிகலங் களை மக்கள் அணிந்து மகிழ்ந்தனர்.

நகை அணிதலோடு தொடர்பு டைய பல சொற்களை இலக்கியங் களிற் காணப்படுகின்றன. அந்தவகையில் அணி(ani), ஆர்(ar), சூடு(sudu) புனை(puni) பூண்(pun), வேய(vey) போன்ற சொற்கள் நகைகள் அணிவதைக் குறிப்

பனவாக உள்ளன. இவற்றின் பெயர்ச் சொற்கள் பலநகைகளைக் குறிப்பன வாகவும் உள்ளன. மதுரைக் காஞ் சியில் (512) சூடுது நன்பொன் சுட ரிழை புனைஞரும்" என்ற குறிப்புக் காணப்படுகிறது. நகைத்தொழில் செய் முறையில் நல்ல பொன்னைச் சூடாக்கி ஒளி பொருந்திய அணிகலன் களைச் செய்தல் பற்றியே இங்கு கூறப் படுகிறது. மேலும் சங்கு அறுத்து வளையலகள் செய்யப்படுவதை அடிப் படையாகக்கொண்டதொழில் முறையில் ஈடுபட்டோர் கடைநர்(kadainar) என்றழைக் கப்பட்டனர். மதுரைக்காஞ்சி (511) "கோடு போழ் கடைநரும்" என்று கூறப்படுவதுடன் 'குயினர்'என்போர் இரத்தினக்கல்லிற் துளை போடுவோர் என்பதனை "திருமணிக் குயினரும்" என்று குறிப்பிடப்படுகிறது.

மோதிரம்அணிதல்அனைத்துமதத்தி னராலும் மேற்கொள்ளப்படுகிறது.திரு மண அடையாளமாகவும் இது அமைகிறது.பெண்கள் திருமணத்தோடு மட்டுமன்றி திருமணத்தின் பின்னரும் சடங்கு ரீதியாக நகைகளை அணியும் வழக்கம் காணப்படுகிறது. அதில் முக்கிய மாக உயர்சாதி இந்துக்கள் மத்தியில் வளைகாப்பு அல்லது சீமந்தச்சடங்கு இடம்பெறுகிறது. சிமந்தத்தில் வளையல் களை அணியும் வழக்கம் சிறப்பாக இடம் பெறுகிறது.

மக்கள் தாம் அணிகலன்களை அணிந்ததுடன் மாத்திரமன்றித் தம் கடவுள் களையும் அணிகலன்களால் அழகு படுத்தி வழிபட்டனர். கடவுளர்களும் பெண்கடவுளர்களும் எப்பொழுதும் உயர்ந்த இரத்தினங்களினால் இழைக்கப் பட்ட ஆபரணங்களினால் அலங் கரிக்கப்பட்டனர் கடவுளர்களுக்குரிய ஆபரணங்கள் பற்றி ஆகமங்கள் சிற்ப சாஸ்தி ரங்களிலும் ஏனைய நூல்களிலும் குறிப் புக்கள் உள்ளன.

## சாதி அடிப்படையில் அணிகலன்கள்

யாழ்ப்பாண சமூகம் ஓர் ஏற்றத் தாள்வுள்ள சமூகம் என்றவகையில் சாதிகளின் அடிப்படையிலும் அணி கலன்களை அணிவதில் வேறுபாடு இருந்தமை கோடிட்டுக் காட்ட வேண்டியதாக உள்ளது. இங்கு வெள் ளாளர் என்போர் உயர்சாதியினராக விளங் கினர். ஏனைய நட்டுவர் செட்டியார், சேணி யர், தட்டார், கொல்லர், தச்சர், கோவியர், கரையர் போன்றோர் வெள்ளாளரைவிடக் குறைந்த சாதி அந்தஸ்துள்ளவராகக் கருதப் பட்டனர். நளவர், பள்ளர், பறையர், கரையார், வண்ணார், திமிலர், அம்பட்டர் தாழ்ந்த சாதியினராகக் கொள் ளப்பட்டனர். இவர்கள் வெள்ளாளருக்குக் குடிமக்களாகவும் விளங்கினர். சாதி அமைப்பு முறை தொழிலை அடிப் படையாகக் கொண்டிருந்தாலும் ஏற்றத் தாழ்வுள்ளதாகவே காணப்பட்டது. இவர் களுள் நளவர் எனப்படும் சாதியினர் முக்கிய மாகச் சீவற் தொழிலாளர்களாக இருந் தனர். பனையில் ஏறும்போது தளநாரு டன் ஏறும் இவர்கள் இறங்கும் போது நழுவிக்கொண்டு இறங்கியதால் 'நளுவர்' எனப்பட்டனர். காலப்போக்கில் "நளவர்" எனப் பெயர் மருவியது. "பறை" எனும் மேளத்தை அடிப்போர் பறையர் என்று அழைக்கப்பட்டனர். கோவி யர் வெள்ளாளர்களுக்குக் குடிமக்க ளாகச் சேவகம் செய்தனர். இவர்களு டன் பள்ளர், பறையர், வண்ணார், அம்பட்டர் போன்றோரும் வெள்ளாளர் களும் கடமை செய்யவேண்டியவராக விளங்கினர். பள்ளர் என்போர் பள்ள நிலங்களில் வாழ்ந்து வெள்ளாளர்களுக்கு வயல், விவசாய நிலங்களிற் கூலிகளாகத் தொழில் புரிந்து வந்தனர். இத்தகைய ஒரு சமூகப் பின்புலத்தில் அதுவும் பாரம்பரியச் சிறப்பியல்பினைக் கொண்ட சமூகத்தில் சாதிகளின் அடிப்படையில் நகை

களை அணியும் வழக்கம் இருந்துள்ளமை கவனத்தைக் கவர்கிறது. இன்றைய தமிழ்ச்சமூகம் மாற்றமடைந்துள்ள நிலையிலும் அவை அகநிலையில் பெரிதும் பழமையில் ஊறியிருப்பதாகவே தெரிகிறது.

அணிகலன்களை அணிவதில் ஆரம்ப காலங்களில் உயர்சாதிப் பெண்கள் தங்கநகைகள் அணியும் வழக்கம் காணப்பட்டது. தாழ்ந்த சாதிப்பெண்கள் அவ்வாறு நகைகள் அணிய அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் செப்பு, வெள்ளி, பித்தளை போன்ற உலோகங்களில் நகைகளை அணியும் வழக்கமே காணப்பட்டது. கழுத்து ஒட்ட நகைகள் அணியலாமே அன்றி நீண்ட மாலை போன்ற அமைப்பில் நகைகள் அணியமுடியாத நிலையே காணப்பட்டது. தாலி அணிவதிலும் பிராமணர்கள், உயர் சாதியினர் கொம்புத்தாலி அணியும் போது தாழ்த்தப்பட்டோர் பொட்டுத்தாலி அணியும் வழக்கமே காணப்பட்டது. கரையார் என்போர் கடற்கரையோரங்களில் வாழ்பவராகவும், மீன்பிடித் தொழிலிற் பெரிதும் ஈடுபட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களது நகைகளிற் பெரும்பாலும் மீன் சின்னம் அலங்கார வேலைப்பாடுகளுடன் இடம் பெறுவது கவனிக்கத்தக்கது. மேலைக் கரையார்கள் பெரும்பாலும் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. இது பின்னர் ஆங்கிலேயக் காலனித்துவக் காலத்திற் சாதி அமைப்பு முறையில் இறுக்கம் குறைய நகை, நட்டு அணிவதிலும் மாற்றங்கள் வருகின்றன. சாதி அடிப்படையிலான தொழில்முறைகள் என்ற நிலைமாறி கல்வித் தகுதிக்கேற்ப தொழில் முறைகள் இடம்பெற்றதோடு பரம்பரைத் தொழில், குலத்தொழில் என்ற வரையறைகளும் மாறுகின்றன. நகை செய்தல் அல்லது ஆபரணத்தொழில் பஞ்சகம்மாளரில் தட்டார் அல்லது பொற்கொல்லரிடமே இருந்த நிலைமாறி ஏனையோரும் இத்தொழிலில் ஈடுபட முடிந்தது. குறிப்பாகப் பஞ்சகம்மாளரில் ஏனைய கைவினைகளைச் செய்வோரும் நகைத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு ஐதீகம் , சடங்கு, சம்பிரதாயம் , சாதி, சமயத்துடன் தொடர்புடைய அணிகலன்கள் யாழ்ப்பாண சமூகத்தில் பொருளாதார அடிப்படையில் சேமிப்புடன் தொடர்புடையவை. மண்ணிலும் பொன்னிலும் பணத்தைச் சேமித்தல் மக்கள் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறுகிறது.

நகைத்தொழில் செய்யும் பத்தர்கள் குறிப்பாக நாச்சிமார் கோயிலை அண்மித்த பகுதிகளில் வசிப்போர் நகைத் தொழிலில் மட்டுமன்றி கோயில் அலங்காரக்கலைகளிலும் மிகப்புகழ் பெற்றவர்களாக விளங்குகின்றனர். நாச்சிமார் கோயிற் பிரமோற்சவ காலங்களிலும் சிறப்பாகப் பூங்காவனத்திருவிழாவின் போதும் பல்வேறு வகையான சாத்துப்படி அலங்காரங்களைச் செய்வது வழக்கம். இவை கலைநயமும் கண்ணைக் கவரும் அழகும் உடையவை. காசுமரம் போன்ற மின்னலங்காரங்களை அம்மன் வீதியுலாவுக்குச் செய்தமை குறிப்பிடத்தக்கது. திருவிழாக் காலங்களிற் கோயில் அலங்காரங்களைப் பார்ப்பதற்கென்றே மக்கள் இக்கோயிலுக்கு வருகைதருவது அதன் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறு நாச்சிமார் கோயிலடி, தட்டார் தெரு போன்ற பிரதேசங்களில் வாழும் பொற்கொல்லர்களின் செயற்பாடுகள் நாச்சிமார் கோயிலுடன் தொடர்புபட்டுக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. கோயில் முகாமையாளர்கள், நிர்வாக சபை அங்கத்தவர்களாக இருந்து காலத்துக்குக் காலம் கோயிற் கட்டட அபிவிருத்தி, கிரியைகள், சடங்குகள், கோயிற் சாத்துப்படி, அலங்கார வேலைப்பாடுகள், கைவினைக்கலை வளர்ச்சிக்குப் பெரும்

பங்களிப்புச் செய்து வருகின்றனர். இக் கோயிலில் பஞ்சகம்மாளரின் தோற்றத்துடன் தொடர்புடைய விராட் புருஷனாகிய விஸ்வப்பிரமனுக்கு பரிவார தெய்வங்களில் ஒன்றாகும் தகுதிப்பாடு கொடுக்கப்பட்டுப் பூசை நடைபெறுவது வழக்கமாக உள்ளது. இக்கோயிலானது மரச் செதுக்கல் வேலைப்பாட்டிற் சிறந்த வாகனங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது.

கோயிற் கைவினைக் கலைகளில் ஒன்றாக மரச்செதுக்கல் வேலைப்பாடுகள் முக்கியத்துவம் பெறுவன. அந்த வகையில் காராம்பசு, கைலாசவாகனம், ஆட்டுக்கடா, கிளி, மயில், காமதேனு போன்ற வாகனங்களும் இங்கு இடம்பெறுகின்றன. திருவிழாக்காலத்தில் அம்மனுக்குக் கட்டியங் கூறும் போது பின்வரும் வாசகம் உச்சரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. "யாழ்ப்பாணம் வண்ணை மாநகரே ஸ்ரீமத் குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பிகா, ஜகத்துவஜாரோகணாதி தீர்த்தாந்த பஞ்ச தச தின பரியந்தம் மஹோற்சவ கல்யாண சேவாந்தே மனு மய துஷ்டா சில்பி விஸ்வக்ஞ வம்சகுல தேவாலயே அனு மத்துவஜ மேகவாகன பஞ்சானை பர பிரம்ம விராட்விஸ்வம்பிரம்ம குல சமூக சித்த"

1950இல் வெளியான கோயில் வாசிகசாலைப் பிரசுரம் ஒன்றில் ஆறு முகநாவலரின் போதனைப்படி விஸ்வப் பிரமகுலக் கம்மாளர்கள் பூணூல் தரித்து சைவாசாரங்களைக் கடைப் பிடிக்க வேண்டும் என்று வற்புறுத் தப்பட்டிருந்தமையும் கவனிக்கத்தக்கது. மனிதராகப்பிறந்தவர்கள் தத்தம் ஒழுக்கத் துடன் கூடிய வாழ்க்கையில் ஈடுபட்டுத் தம் உயர் குறிக்கோளை அடைய வேண்டும் என்பது நல்லைநகர் நாவலரது எண்ணம் ஆகும்.

பொற்கொல்லர் பரம்பரையில் வந்த பெண் கைவினைஞரான அமரர் சரஸ்வதி கந்தசாமி அவர்களது கைவினைத் திறன்மிக்கவேலைப்பாடுகள்பற்றிஎடுத்துக் கூறுவதும் பொருத்தமானதே. எவரிடமும் கலைப்பயிற்சி பெறாது தனது சுயஆக்கத் திறன், கற்பனை, அழகுணர்வு மூலம் பல்வேறு படைப்புக்களையும், கைப் பணிப் பொருட்களையும் உருவாக்கிய வராகக் காணப்படுகிறார். இவர் தீட் டிய ஓவியங்களில் படைப்புத் தொழிலுக் குரிய விஸ்வகர்மாவின் வடிவம் புகழ்பெற்றது. 1954இல் இடம்பெற்ற விஸ் வகர்ம மகாநாட்டில் இது இடம்பெற்றுப் பெருமை சேர்ந்ததாக அறிய முடிகிறது. இவரது ஓவியங்களுள் பஞ்சமுக காயத் திரி மிகவும் சிறப்புடையது. இவ் வடிவமானது முத்து, பவளம், பொன், நீலம், படிகநிறம், ஐந்தும் தனித்தனியே பொருந் திய ஐந்து முகங்களையும் பத்துக் கரங்களையும் கொண்டதாகவுள்ளது. மணி முடியைத் தாங்கிய இவ்வடிவம் அழகு பொருந்தியது. ஹஸ்தங்களில் சாட்டை, சங்கு,சக்கரம், தாமரை, கபாலம் போன்றனவும் இடம்பெறுகின்றன. இவ்வடிவத் தினூடாக சரஸ்வதி அவர்கள் சைவ, வைஷ்ணவ மத இணைப்பினைக் கொண் டுவர முயற்சித்திருக்கலாம். சத்தியை சிவனது ஆற்றலாக உருவகிக்கும்போது சிவனுக்குரிய ஆயுதங்களையும், விஷ்ணுவுக் குரிய சக்தியாக உருவகிக்கும் போது விஷ்ணுவின் ஆயுதங்களையும் கைகளிற் தாங்கிய நிலையில் வர்ணிக்கின்றமையைக் கவனத்திற் கொள்ளலாம். இந்து மர பில் சிவனே விஷ்ணுவுக்கு சங்கு, சக்கரங்களை அருளியதாக நாயன்மார் பாடல்களிற் கூறப்பட்டுள்ளமையும் குறிப் பிடத்தக்கது. சரஸ்வதியின் பஞ்சமுக காயத் திரி அத்தகைய ஒரு கருத்து நிலையைத் தோற்றுவிப்பதாக உள்ளது.

அமரர் சரஸ்வதி அம்மையார் இயல்பாகவே தொழிற்திறனும், செய்தொழில் நேர்த்தியும் கற்பனை உணர்வும், அழகியல் ரசனையும் உடையவராகக் காணப்பட்டார். தனது விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் அழகிய கைவினைப்பொருட்கள் பலவற்றை உருவாக்கி உள்ளார். அவற்றுள் வீட்டுப்பாவனைக்குரிய குறிப்பாக மேசைவிரிப்புக்கள், நாற்காலி விரிப்புக்கள், ஆராத்தி தட்டுக்களை அழகுபடுத்தும் விரிப்புக்களைச் சித்திரங்களைத் தீட்டி அழகுபடுத்தினார். இவரது கைவண்ணத்தில் உருவான மேற்படி பொருட்கள் அவரது கைவினைத்திறனையும், ஓவியக் கலையில் அவருக்குள்ள ஈடுபாட்டையும் விளக்குகின்றன. மேலும் சில பொம்மைகளை வாங்கி அவற்றை ஆடை ஆபரணங்களினால் அலங்கரித்துக் காட்சிக்கு வைத்து வீட்டை அழகுபடுத்தியுள்ளார். அந்த வகையில் திருமணக்கோலத்தில் மணமகன் மணமகள் உருவங்கள் குறிப்பிடத்தக்கன. துணியினாற் செய்தமயில் உருவங்களும் எமது கருத்தை கவருவனவாக உள்ளன.

## மட்பாண்டக் கைவினை

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அருகிவரும் ஒரு கைவினைக்கலையாக விளங்குவது மண்பாண்டக்கைவினையாகும்(potters craft). நல்லூரை அண்மித்த பகுதிகள் என்று பார்க்கும் போது கல்வியங்காடு மட்பாண்டத் தொழில் முறைக்கு இன்னும் இடம்கொடுக்கும் ஓர் இடமாகக் காணப்படுகிறது. சாதிமுறையில் குயவர்களே பண்டைக்காலத்தில் மட்பாண்டத் தொழிலைச் செய்து வந்தனர். மட்பாண்டங்கள் என்று பார்க்கும் போது ஆரம்பத்தில் சமையலுக்கு வேண்டிய சட்டி, பானை, உலைமூடிச் சட்டி, கறிமூடிச்சட்டி, கூசா, கள்ளுமுட்டிகள், சூட்டடுப்பு போன்றனவே பெரும்பாலும் உற்பத்தி செய்யப்பட்டன. காலப்போக்கிற் பூச்சாடிகள், அலங்காரப் பொருட்கள் போன்றனவும் மண்ணாற் செய்யப்பட்டன.

மண்பாண்டச் செய்முறைக்குப் பிரதானமூலப்பொருள் களி மண் ஆகும். களிமண்ணை நீரிற்கரைத்து அரிதட்டில் வடித்தெடுத்து வெயிலிற் காயவைக்க வேண்டும். இறுகிய பதம் வந்ததும் அதனை நன்றாகமிதித்து மிருது வாக்கிப்பின்னர் திரிகையில் வைத்துத் தேவையான வடிவங்களில் மட்பாண்டங்களைச் செய்யலாம். பின் இப்பாத்திரங்களை வெயிலில் உலர்த்தி வைக்கோற் சூளையில் இட்டுச் சுட்டு உறுதியான பொருளாக வெளிக்கொணர்தல் இடம்பெறுகிறது.

கல்வியங்காட்டில் 18வருடங்களாக இத்தொழிலில் ஈடுபட்டுவரும் ரவிக்குமார் என்பவரிடம் உரையாடிய போது பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலையே மேற்கூறப்பட்ட கருத்துக்கள் அமைகின்றன. இன்று இத்தொழில் அருகிப் போனமைக்கு அதன் பயன்பாடு மக்கள் மத்தியிற் குறைந்தமையும், மூலப் பொருளைப் பெறுவதில் உள்ள தாமதங்களும், சட்டதிட்டங்களுமே காரணமாகின்றன. அலுமினியம், எவர்சில்வர் பொருட்களின் பாவனையும் எரிவாயு, மின்னடுப்பு பாவனைகளும் அதிகரித்திருப்பதினால் மட்பாத்திரங்களில் சமையல் செய்வதும் குறைந்துள்ளது. ஆனாலும் சடங்குகள், சம்பிரதாயங்கள், விழாக்களில் மட்பாண்டங்களின் தேவை இன்றும் காணப்படுகிறது. வருடப்பிறப்புத் தினங்களில் பௌத்தமக்கள் மண்ணாலான குண்டான் சட்டிகளிலேயே பால் காய்ச்சுவதைக் காணலாம். நகரப் பிரதேசங்களிற் கூட இப் பாத்திரங்கள் பயன்பாட்டில் உள்ளதைக் காணலாம்.

## முடிவுரை

கைவினைப் பொருட்கள் செய்வதில் பஞ்சகம்மாளர் வல்லவராக விளங்கினர். கைவினை என்பது கலைத்துவப் பொருட்களை உற்பத்தி செய்யும் முறையாக உள்ளது. தொழிற்திறன்மிக்க ஒரு கைவினைஞனது கையில் இருந்து உருவாகும் ஒரு கைவினைப் பொருள்கூட ஒரு கலைப்படைப்பாகக் கொள்ளப்படலாம். எனினும் கைவினைப்பொருட்களின் முதன்மை நோக்கம் மக்களது பயன்பாட்டு நோக்கிற் பொருட்களை உற்பத்தி செய்தலே. வீட்டுப்பாவனைக்கு வேண்டியன, கோயிற் சடங்குகள் கிரியைகளுக்கு வேண்டியன விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்முறைகளுக்கு வேண்டியன என்ற வகையிற் பல்வேறு கைவினைப் பொருட்கள் பஞ்சகம்மாளரினால் வடிவமைக்கப்படுகின்றன. மேலும் கோயிற் கட்டடக்கலையை அழகுபடுத்தும் அலங்கார வேலைப்பாடுகள், மக்கள் அணியும் அழகிய அணிகலன்கள், வீட்டை அழகுபடுத்தும் அலங்காரப்பொருட்கள் என எண்ணுக்கடங்காத கைவினைப்பொருட்கள் பற்றி அறியலாம். மேலும் யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கிடைக்கக்கூடியபனையை அடிப்படையாகக் கொண்ட அழகிய கைவினைப் பொருட்கள் உருவாக்கப்படுவதுடன் அவற்றுக்கான சந்தை வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும்கைவினைஞர்களினால் வடிவமைக்கப்படும் பொருட்கள் பாரம்பரியமாக மக்கள் பாவிப்பதுடன் அடுத்த தலைமுறையினருக்கு அவற்றைப் பேணிப் பாதுகாத்துக் கையளிப்புச் செய்வதன் மூலம் தமது பண்பாட்டு மரபுரிமையைப் பேணுகின்றனர். குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்கள் தம் சமூக வரலாற்று வளர்ச்சியினூடாகத் தோற்றுவித்த பௌதீகப் பொருட்கள் அனைத்தும் அவை கலை நயம் வாய்ந்தவையாகவோ, பயன்பாட்டை நோக்காகக் கொண்டதாகவோ இருக்கலாம் அம்மக்களது பண்பாட்டு மரபுரிமைச் சொத்துக்களாகவே கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் காலத்தின் தேவை, கேள்வியைப் பொறுத்தும் அவற்றின் அருந்தற் தன்மை காரணமாகவும் அவை கலைப் பெறுமானத்தைப் பெறலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. Coomaraswamy,A.K(1907) The Medieval Sinhalese Art,Munshirm Manoharlal Pub, Pvt,Ltd
2 Kamaladevi,C,(1985) The Glory of Indian Handicrafts, Clarion Books, New Delhi
3. Inglish Stephen(1980) A village Art of South India, The work of the Velar, Publication Division, Madurai Kamaraj University


